செ.வெ.எண்.368, நாள்: 01-08-2017

# பத்திரிக்கை செய்திக்குறிப்பு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 500 அங்கன்வாடி பணியாளர்கள் பணியிடங்களும், 172 குறுஅங்கன்வாடி பணியாளர்கள் பணியிடங்களும், 411 அங்கன்வாடி உதவியாளர்கள் பணியிடங்களும் நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

இது தொடர்பாக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்ட செய்தி அறிக்கை.

காஞ்சிபுரம் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின்கீழ் செயல்படும் அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள பின்வரும் பணியிடங்களுக்கு மாவட்ட அளவிலான இனசுழற்சி முறையில் நேரடி நியமனம் மூலம் காலிப்பணியிடங்கள் பூர்த்தி செய்திட தகுதி வாய்ந்த பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்ப படிவங்கள் சார்ந்த குழந்தை வளாச்சி திட்ட அலுவலர்களிடம் நேரடியாக சென்று இலவசமாக 01.08.2017 முதல் 16.08.2017 வரை அரசு வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விண்ணப்ப படிவங்களை **http://www.icds.tn.nic.in/appointment_criteria.html** என்ற வலைபக்கத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 16.08.2017 அன்று மாலை 5.45 மணி வரை அந்தந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளப்படும். அதன்பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. காலிப்பணியிடம் மற்றும் அதற்கான இனசுழற்சி விவரங்களை அந்தந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலக அறிவிப்பு பலகையில் தெரிந்துகொள்ளலாம்.

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | மொத்த காலிப்பணியிடம் | சம்பள ஏற்றமுறை |
|---|---|---|---|
| 1 | முதன்மை அங்கன்வாடி பணியாளர்கள் | 500 | ரூ.2500 – 5000 தரஊதியம் ரூ.500- மற்றும் தற்போது நடைமுறையிலுள்ள படிகள் |
| 2 | குறு அங்கன்வாடி பணியாளர்கள் | 172 | ரூ.1800 – 3300 தரஊதியம் ரூ.400- மற்றும் தற்போது நடைமுறையிலுள்ள படிகள் |
| 3 | முதன்மை அங்கன்வாடி உதவியாளர்கள் | 411 | ரூ.1300 – 3000 தரஊதியம் ரூ.300- மற்றும் தற்போது நடைமுறையிலுள்ள படிகள் |

பணியிடங்கள் காலியாக உள்ள மையங்களின் பெயர்பட்டியல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட திட்ட அலுவலகம் (ஒகுவதி) மற்றும் சார்ந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலக தகவல் பலகையிலும் ஒட்டப்பட்டிருக்கும்.

விண்ணப்பதாரர்களுக்கான தகுதி:

1. முதன்மை அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் குறுஅங்கன்வாடி பணியாளர்கள் பணிக்கு 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
2. முதன்மை அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் குறுஅங்கன்வாடி பணியாளாகள் பணிக்கு 01.07.2017 அன்று 25 வயது முடிவுற்றவராகவும் 35 வயதிற்கு மிகாதவர்களாக இருக்க வேண்டும்.

3. முதன்மை அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் குறுஅங்கன்வாடி பணியாளர்கள் பணிக்கு விதவை, கணவரால் கைவிடப்பட்டவர் மற்றும் மலைவாழ் மக்கள் 25 வயது முடிவுற்றவராகவும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
4. விண்ணப்பதாரர் மையம் உள்ள இடத்திலிருந்து 10கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
5. குறுமையப்பணியாளர் பணிக்கு தேர்வு செய்யப்படுபவர் சமைக்கத் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும். (குறு மையத்திற்கு உதவியாளர் பணியிடம் அளிக்கப்படவில்லை).
6. அங்கன்வாடி உதவியாளர் பணிக்கு விண்ணப்பிப்பவர் தமிழ் எழுதப்படிக்கத் தெரிந்தவராக இருக்க வேண்டும்.
7. அங்கன்வாடி உதவியாளர் பணிக்கு மையம் உள்ள இடத்திலிருந்து 10 கி.மீக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
8. அங்கன்வாடி உதவியாளர் பணிக்கு 01.07.2017 அன்று வயது வரம்பு 20 வயது முடிவுற்றவராகவும் 40 வயதிற்கு மிகாதவர்களாக இருக்க வேண்டும்.
9. அங்கன்வாடி உதவியாளர் பணிக்கு கணவனை இழந்தவர், கணவரால் கைவிடப்பட்டவர் மற்றும் மலைவாழ் மக்கள் 01.07.2017 அன்று 20 வயது முடிவுற்றவராகவும் 45 வயதிற்கு மிகாதவர்களாக இருக்க வேண்டும்.
10. பணியாளர் மற்றும் உதவியாளர் பணிக்கு போதிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும்.
11. தகுதிவாய்ந்த மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்களுக்கு வயது உச்சவரம்பில் 3 ஆண்டுகள் தளர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் விண்ணப்பதாரர்கள் சிறு குழந்தைகளை கையாலும் திறன் படைத்தவர்களாக இருத்தல் வேண்டும்.

மேற்கண்டவாறு அங்கன்வாடி பணியாளர்கள், குறுஅங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்கள் பணி நியமனத்திற்கான விண்ணப்பங்கள் கோரி தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்திட பத்திரிக்கை செய்தி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பார்வைக்கும், அனுமதி வேண்டியும் கோப்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.